Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Dec. 12 : 645 Nos.
  Up to Nov. 12 : 633 Nos.
- **Performance Dec. 12 ...**
  Turnover growth : 7.53%
  Employment growth : -0.54%
  100% Attendance : 14.59%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano Innovation In Inert Metals –Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment –Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels –FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green –HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN –Portal for Exotic Metals

Tiaano Vidyashrm –Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




### அர்த்தமுள்ள புத்தாண்டு

நம் உள்ளம் நிறைந்து அன்பை பிறருக்கு வழங்க நல்ல உடல் நலத்தையும் உன்னிடம் இருக்கும் அத்தனை நலங்களையும் பகிர்ந்தளிக்க நல்ல பெருந்தன்மையும் அனைவருக்கும் அளிக்குமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழுங்கள். போதுமென்ற மனமும், போதுமானவை இருக்கிறது என்ற உணர்வும் இருந்தால் இந்த உலகமே நம்முடையது. நம் கடந்த கால தவறுகளை திருத்திக் கொள்ளவும், இதுவரை பார்க்காதவற்றை பார்க்கவும், செய்யாத செயலை செய்யவும் புதிய இன்னொரு ஆண்டைக் கடவுள் நமக்கு அளித்திருக்கின்றார்.

2012 ஆம் ஆண்டுக்கு விடைகொடுக்கின்ற இந்த நாளிலே கடந்த ஆண்டின் அழகான பொக்கிஷங்களையும், நாட்களையும், நினைவு கூர்ந்து நாம் அனைவரும் வெற்றிப்பாதையில் முன்னேறவும், பழையன மறந்து நல்ல நினைவுகளை மனதில் கொண்டு வரப் போகும் புத்தாண்டில் புதிய முயற்சிகளில் கால் பதிக்கவும், எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றிகளை குவிக்கவும், 365 நாட்களுக்கான அன்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவற்றை இறையருளால் மகிழ்ச்சியுடன் காணும்படி உங்கள் அனைவரையும் வாழ்த்தி 2013 ஆம் ஆண்டு ஒரு அர்த்தமுள்ள புத்தாண்டாக அமைய இறைவனை வேண்டி அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும், இனிய பொங்கல் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Ms. P.E. Nancy
Director – Admin

## Believe

1. Once, all villagers decided to pray for rain, on the day of prayer all people gathered and only one boy came with an umbrella......**THAT'S FAITH think**
2. Example of the feeling of a one year old baby. When you throw him in the air, he laughs because he knows you will catch him.....**THAT'S TRUST**
3. Every night we go to bed, we have no assurance to wake up alive the next morning but still we set alarm for tomorrow........... **THAT'S HOPE**

Compiled by : Mr. Shahul Hameed Bava
Service Provider

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr. G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 044 - 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!

அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னைவளர்ப்பினிலே!

**Mr. C. Sounder Suresh** **2nd Feb.**
Purchase



**Miss. P. Nirmala Devi** **25th Feb.**
Purchase

### Best Wishes from Tiaano Employees



நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி,

அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்.

கையில் பணமில்லையே.. உடலில் வலுவில்லையே..

உதவி செய்ய நண்பர்கள் இல்லையே...

என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே

எதற்கும் பயப்படாதே.. தயங்காதே...!

இலக்கை நோக்கி அடியெடுத்து வை.

தொடர்ந்து முன்னேறு.

சோதனைகள் விலகும். பாதை தெளிவாகும்.

நோக்கத்தை அடைந்தே தீருவாய்,

அதை யாராலும் தடுக்க முடியாது.

சுவாமி விவேகானந்தர்.

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

அந்த எளிய தொழிலாளியை எல்லாரும் ஏவிக் கொண்டிருந்தார்கள். ஏச்சுக்கள், வீண் பழிகள், பதட்டத்தில் இரண்டு பீங்கான் கோப்பைகளை உடைத்திருந்தான். அவனது மனநிலை உணர்ந்த நண்பன் வீடுவரை துணை வந்தான். வீட்டு வாசலுக்குள் அடியெடுத்து வைத்ததும் தொழிலாளியின் முகம் உற்சாகமானது.

ஆட்டமும் பாட்டமுமாய் மாறிவிட்டான். அதிசயித்த நண்பன் விபரம் கேட்டான் வீட்டுக்கு வெளியே இருந்த மரத்தைக் காட்டினான் தொழிலாளி "அங்கேயே என் வருத்தங்கள், கவலைகள், அவமானங்களை மாட்டிவைத்து விடுவேன். வீட்டுக்குள் வந்ததும் மகிழ்ச்சியாகி விடுவேன். காலையில் புறப்படும் போது பார்ப்பேன். மரத்தில் மாட்டி வைத்திருந்த வருத்தங்களெல்லாம் காணாமல் போயிருக்கும்".

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### பேராசை

ஒருவன் தவம் செய்து இறைவனிடம் தன் ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற ஓர் ஆள் வேண்டும் என்று கேட்டான். அதற்கு இறைவன். "நீ கேட்ட வரத்தைத் தருகிறேன், ஆனால் நீ அவனுக்குத் தொடர்ந்து ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் உன்னை விழுங்கி விடுவான்... என்றார்.

அவனும் சரியென்று சம்மதித்தான். உடனே இறைவன் அவனுடன் ஒரு பூதத்தை அனுப்பி வைத்தார். பேராசை கொண்ட அவன், அந்த பூதத்திடம் 'எனக்கு இந்த நாட்டு அரசன் வசிப்பதை விடப்பெரிய அரண்மனை ஒன்று வேண்டும்" என்றான்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் அழகிய அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொடுத்தது பூதம். அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மேலும் மேலும் அவன் ஆசைப்பட்டவற்றையெல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றிவிட்டு, "வேலை கொடு... வேலை கொடு... இல்லையென்றால் உன்னை விழுங்கி விடுவேன்" என்று பூதம் அவனை மிரட்ட ஆரம்பித்தது.

பூதத்துக்கு வேலை கொடுப்பதே அவனுக்கு வேலையாகி விட்டது. அவனால் முடியாமல் போய் மிகவும் சோர்வடைந்து போனான். பூதம் அவனை விரட்ட ஆரம்பித்தது. மீண்டும் இறைவனிடம் ஓடினான்... "என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்..." என்று கட்டளையிட்டார்.

பூதமும் இறைவன் சொன்னபடி படிகளில் விடாமல் ஏறி இறங்கிக் கொண்டேயிருந்தது. பேராசைக்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று எண்ணிய படி, இறைவனை வணங்கிவிட்டுச் சென்றான்.

அந்தப் பூதம் வேறு யாருமில்லை... நமது மனம்தான்... நமது மனம் நமக்குத் தேவையானவற்றை அடைய வழியைக் காட்டும். பேராசைபட்டால் நம்மையே அழித்துவிடும்.

Compiled by : Mr. P. Gopala Krishnan
Production

## தெரிந்து கொள்வோம்

1. உலகிலேயே அதிகம் பேருக்கு இருக்கும் பெயர் "முஹம்மது"
2. ஆங்கில கீபோர்டில் ஒரே வரிசையில் அதிக எழுத்துக்கள் பயன்படுத்தப்படும் ஒருசொல் "TYPE WRITER".
3. அதே போன்று இடது கையினால் மட்டும் டைப் செய்யப்படும் நீண்டவார்த்தை "Stewardessed".
4. வானத்தை நிமிர்ந்து பார்க்க இயலாத ஒரே விலங்கு "பன்றி".
5. Sixth Sick Sheik's Sixth Sheep's Sick - இதுவே ஆங்கிலத்தில் மிகவும் கடினமான "Tongue Twister".
6. 111, 111, 111 ஐ திரும்ப 111, 111, 111 ஆல் (111, 111, 111 ஒ 111, 111, 111) பெருக்கினால் 12,345,678,987,654,321 என்ற விந்தையான கூட்டுத் தொகை வரும்.
7. எப்போதும் கெட்டுப் போகாத ஒரே உணவு "தேன்".
8. தீப்பெட்டி கண்டுபிடிப்பதற்கு முன்பே சிகரெட் லைட்டர் கண்டுபிடிக்கப்பட்டது.
9. உலகில் மனிதர்கள் அதிகமாக இறப்பதற்கு காரணமாகும் விலங்கு – கொசு.
10. தும்மும்போது 'நன்றாய் இரு" "இறைவனுக்கு நன்றி" என்று சொல்லக் கேட்டிருப்போம்., ஆமாம் உண்மையில் தும்மும்போது இதயம் ஒரு 'மில்லிசெகண்ட்' நிற்குதாம்.
11. பூமியின் எடை 5,972,000,000,000,000,000,000 டன்கள்.

Compiled by : Miss. T. Gowsala
Facilitation

### இல்லவே "இல்லாத" நாடுகள்

1. "திரையரங்குகள்" இல்லாத நாடு – **பூட்டான்.**
2. "தினசரி பத்திரிகைகள்" இல்லாத நாடு – **காம்பியா**
3. "காகங்கள்" இல்லாத நாடு – **நியூசிலாந்து**
4. "ரயில்" இல்லாத நாடு – **ஆப்கானிஸ்தான்**
5. "பாம்புகள்" இல்லாத நாடு – **அயர்லாந்து**
6. தனக்கென "உத்தியோகபூர்வ தலைநகரம்" இல்லாத நாடு – **நவ்ரு**
7. தனக்கென "தாய்மொழி" இல்லா நாடு – **சுவிட்சர்லாந்து**
8. "பொதுக்கழிப்பறைகள்" இல்லாத நாடு – **பெரு**
9. "வாடகைக்கார்கள்" இல்லாத நாடு – **பேர்முடா**

Compiled by : Mr. D. S. Anish
System Admin

### இந்திய உலோக வளங்கள் மீதான உண்மைகள்

இரும்பு தொடர்புடைய உலோக வளங்கள் இந்தியாவில் அபரிமிதமாக உள்ளன. இரும்பு மற்றும் நிலக்கரி தான் இயந்திர சகாப்தம் இந்த உலகில் உருவாவதற்கு காரணமாக அமைந்தது. தற்போதைய மதிப்பீட்டின் படி கண்டறியப்பட்ட இரும்பு தாது வளத்தில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் இருக்கிறது.

பெட்ரோலியம், குரோமைட்ஸ், ஜிப்சம், டின், மெர்க்குரி, தாமிரம், நிக்கல், லீடு மற்றும் ஜின்க் ஆகியவை இந்தியாவில் பொதுமான அளவில் கிடைப்பதில்லை.

ஸ்டீல் தொழில்துறைக்கு அவசியமான மற்றொரு மூலப்பொருளான லைம்ஸ்டோன் (சுண்ணாம்புக்கல்) இந்தியாவில் ஏராளமாக கிடைக்கிறது. அலுமினியத்திற்கான மூல உலோகமான பாக்ஸ் அயிட்டம் மின்சார தொழில்துறைக்கு பயன்படுத்தப்படும் மைகாவும் நம்நாட்டில் அதிகமாக கிடைக்கிறது.

இரும்பு தாதுக்களல்லாத பிற உலோகங்களாக ஜின்க், லீடு, தாமிரம் மற்றும் தங்கம் ஆகியவையும் இந்தியாவில் மிகமிகக் குறைவாகவே கிடைக்கின்றன.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XVIII)

**பயன்படுவதும் பயன்படாததும்**

பிய்ந்துபோன செருப்பு, இனி எப்போதும் பயன்படப்போவதில்லை என்று சொல்லமுடியாது. அதை ஓரளவு ஒழுங்குபடுத்தித் தைத்து வைத்தால், எப்போதாவது பயன்படலாம். அப்படியில்லாமல், வெறுமனே பெட்டிக்குள் ஒளித்து வைப்பதில் யாருக்கு என்ன பிரயோஜனம்?

அதாவது, பழையதையெல்லாம் வீசி எறிந்துவிட வேண்டும் என்று 'செய்ரி' வன்முறையாகச் சொல்வதில்லை, பயன்படாத தேவையில்லாத பொருள்களை என்ன செய்வது என்பது உங்களுடைய உரிமைதான். ஆனால், அவற்றைப் பயன்படும் பொருள்களோடு சேர்த்து வைக்காதீர்கள் என்றுதான் சொல்கிறது.

உதாரணமாக, வீட்டில் ஐந்து பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், ஆளுக்கு ஒரு ஜோடி செருப்பு, சிலருக்கு ஷூ இப்படி எல்லாரும் தினசரி அல்லது அடிக்கடி பயன்படுத்துகிற காலணிகள் மட்டும்தான் அந்தப் பெட்டியில் இருக்க வேண்டும். அப்படியானால், மற்ற செருப்புகளை என்ன செய்யலாம்? நிஜமாகவே பயன்படாத செருப்புகள் என்றால், சிரமம் பார்க்காமல் அவற்றைப் பக்கத்திலிருக்கிற குப்பைத் தொட்டியில் வீசிவிடலாம்.

லேசாகத்தான் பிய்ந்திருக்கிறது என்று தெரிந்தால், இரண்டு ரூபாய் கொடுத்துத் தைத்து சரி செய்து அதன் பிறகு பெட்டிக்குள் வைக்கலாம். மிகவும் பிய்ந்துவிட்டது. ஆனால், செருப்பில்லாமல் சிரமப்படும் பக்கத்து வீட்டு ஏழைப் பையனுக்குப் பயன்படலாம் என்று நினைத்து, தானமாகக் கொடுத்துவிடலாம்.

இப்படி உங்கள் விருப்பப்படி ஏதோ செய்துகொள்ளுங்கள். அது முழுக்கமுழுக்க உங்களுடைய தீர்மானம்தான். ஆனால், நன்கு பயன்படும் நிலையிலிருக்கிற மற்ற செருப்புகளோடு இந்தப் பிய்ந்த செருப்புகள் முட்டி மோதிக் கொண்டு கிடக்கக்கூடாது. அதுதான் முக்கியம். ஆனால், செருப்புகளைப் பொறுத்தவரை, பயன்படுவது எது, பயன்படாதது எது என்று கையில் எடுத்துப் பார்த்துச் சுலபமாகத் தீர்மானித்து விடலாம். மற்ற விஷயங்களில்?

## கவிதைகள்

### TRY ME

When life puts
You in tough
Situations,
Don't say,
**"WHY ME?"**
Just say, **"TRY ME!"**

Compiled by : Mr. M. Kumar
Design

### சாதித்துவிடுகிறாய் நீ!

உன் ஒரே ஒரு அழுகையால்!
உன் அழுகையை ரசிப்பதற்கேனும்
அழவிடலாம் கொஞ்ச நேரம்!
இப்பூவுலகில் உன்னைப் பார்த்தவுடன்
முடிவெடுத்துவிட்டேன்,
இனி வாழப்போவது இந்தப் பூவுக்காகத்தான்!
எல்லா மொழிகளையும் மறந்துவிடுகிறேன்
உன் மழலை மொழியின் சில வார்த்தைகளில்!
தத்தி தத்தி விழுகிறாய்,
விழுந்த பின் சிரிக்கிறாய்,
பின் எழுகிறாய்!
உன்னிடமிருந்து உணர்ந்து கொண்டேன்,
விழுதலிலும், எழுதலிலும் இல்லை
சோகமும், சந்தோசமும்
எல்லாம் அவரவர் மனதினில்!

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## சிந்தனைக்கு

- நீங்கள் விரும்புவதை எல்லா நேரங்களிலும் செய்ய முடியாமல் போகலாம். ஆனால், நீங்கள் செய்கின்றவற்றை உங்களால் எப்போதும் விரும்பி நேசிக்க முடியும்.
- உத்வேகம் அளிக்கும் மந்திரம் "நிகழ் காலத்தில் ஒரு நாள் கடந்த காலத்தை பின்னோக்கி பார்த்தீர்களென்றால், அன்று பட்ட கஷ்டமும், கடும் உழைப்புமே அழகு நிறைந்ததாக, அற்புதமானதாக உங்களுக்குத் தோன்றும்

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– **Editor**

## சிவப்பு, பச்சை, மஞ்சள்

செருப்புப் பெட்டியைத் தூக்கி ஓரமாக வைத்துவிட்டு, கையை நன்றாகத் துடைத்துக் கொண்டு உள்ளே வாருங்கள். நடுக்கூடத்தில் அமர்ந்துகொண்டு, இங்கே எப்படி 'செய்ரி' யைச் செயல்படுத்த முடியும் என்று கொஞ்சம் யோசிப்போம்.

இதுவரை 'செய்ரி' யில் நாம் புரிந்து கொண்டு இருக்கும் விஷயங்கள் என்னென்ன? பயன்படுவது வேறு, பயன்படாதது வேறு, பயன்படாதவற்றுள் – நிரந்தரமாகப் பயன்படாதது, ரிப்பேர் செய்து பயன்படுத்தக் கூடியது என்று இரண்டு வகை உண்டு.

ஆனால் இந்த இரண்டு வகைகளையும், பயன்படக்கூடிய பொருள்களோடு சேர்க்க கூடாது. நாம் வேலை செய்கிற புழங்குகிற இடத்தில், அந்த இடத்துக்குப் பொருத்தமான பயன்படக்கூடிய பொருள்கள் மட்டும் தான் இருக்க வேண்டும். 'செய்ரி' இலக்கணங்களின் அடிப்படையில், இந்தக் கூடத்தில் எவையெல்லாம் தேவையில்லாத பொருள்கள் என்று ஒரு பட்டியல் போடலாம்.

1. டிவி பெட்டிக்குக் கீழே ஆறு மாத செய்தித்தாள்கள் அடுக்கப்பட்டுக் கிடக்கின்றன.
2. சுவரில் சென்ற வருஷ காலண்டர் ஒன்று மாட்டப்பட்டிருக்கிறது.
3. மேஜை இடுக்கில் தேய்ந்த பிரஷ் ஒன்று கிடக்கிறது.
4. ஜன்னலில் துணி க்ளிப் ஒன்று.

நிஜமான பட்டியல், இதைக்காட்டிலும் பெரிதாக இருக்கும், என்றாலும், ஒரு பேச்சுக்கு இந்த நான்கு விஷயங்கள்தான் பயன்படாதவை என்று உங்களுக்குத் தோன்றுவதாக வைத்துக் கொள்வோம்.

எந்தச் சூழலிலும், பயன்படாத விஷயங்களை அங்கிருந்து உடனடியாக அகற்றிவிட வேண்டும் என்கிறது 'செய்ரி' இதன் படி, மேற்சொன்ன நான்கு விஷயங்களையும் கூடத்திலிருந்து நகர்த்திவிடத் தீர்மானிக்கிறோம்.

தொடரும்...

## तुम भी बचा करो, हम को भी बचा करो



Our Honourable UCO Bankers **Mr. Vaithiyanathan – Chief Manager** and **Mr. Raman – Senior Manager** coming together to celebrate New Year party on 1st January 2013 at Tiaano Premises.